2020 மார்ச் 16]

அதைக் கேட்கிறார். அதற்காகத்தான் நான் இதைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே, அனைத்து மாணாக்கர்களும் உயர் கல்வியில் சேர்வதற்கு, அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்கின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு நான் மேலே குறிப்பிட்டதை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அது ஒன்றுமில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கிலோ மீட்டர் கணக்கைச் சொன்னார். கிலோ மீட்டரைச் சொல்கிறேன் என்று சொன்னதால்தான் allow செய்தேன். வேறு ஒன்றுமில்லை.

வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

99—

நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

***24487—திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு வட்டம், பரங்கிவெட்டிகாடு கிராமத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, பரங்கிவெட்டிகாடு கிராமத்தில் தகுதியான நிலம் தெரிவுசெய்யப்பட்டு, நிரந்தர நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட நடவடிக்கை

மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அன்புத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நெல் கொள்முதல் நிலையம் என்பது கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டது. இலவச மின்சாரம் கொடுக்கப்பட்ட காலத்திலேயே விவசாயிகள் பயன்பெறுகின்றவகையிலே நெல் கொள்முதல் கழகம் என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. வியாபாரிகள் குறைந்த விலையில் கொள்முதல் செய்வார்கள் என்பதற்காக இது துவக்கப்பட்டது. இது ஒரு பரீட்சார்த்தமான கேள்விதான்.

முற்பகல் 10–30

பல்வேறு கிராமங்களில், பல்வேறு பஞ்சாயத்துகளிலே கொள்முதல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டும், இன்னும் வெற்றிடங்களிலே, அதாவது, வெயில் காய்ந்து கொண்டிருக்கிற நிலையிலே,வெளியிலேநெற்களெல்லாம்கொட்டப்பட்டிருக்கின்றன. நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு அதிகமான செலவு ஏற்படப்போவதில்லை. நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கான செலவு குறைவுதான். எனவே, இதுபோன்று இருக்கிற பல்வேறு இடங்களில், நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கட்டடங்களைக் கட்டி கொள்முதல் செய்வதன்மூலம் நெல் பாழாவதையும், இழப்புகள் ஏற்படுவதையும் தடுப்பதோடு, விவசாயிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கும் வழிவகை ஏற்படும். ஆகையினால் பல்வேறு இடங்களில் இருக்கிற கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி, நெல்லை கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு வரை 273 ஆக இருந்த நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள், கடந்த 9 வருடங்களில் மட்டும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

2020 மார்ச் 16]

அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அதாவது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேயும், அம்மா அவர்களுடைய வழியில் ஆட்சி செய்துகொண்டிருக்கிற அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களது ஆட்சியிலேயும் 533 ஆக உயர்ந்துள்ளது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்பொழுது 80 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்களைத் தவிர, 125 கட்டடங்களை 56 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கட்டுமானப் பணிகள் எல்லாம் முடிகிறபொழுது, தமிழகத்தில் மொத்தம் 658 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில், கடந்த 9 வருடங்களில் 74 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு 22 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 8 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில், 13 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இத்துடன் 30 இடங்களில் 14 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, அவருடைய ஒரத்தநாடு பகுதியைப் பொறுத்தவரையில், 17 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், 4 இடங்களில் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அதுமட்டுமல்லாமல், 14 இடங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதற்குரிய பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் புறம்போக்கு நிலங்களிலும் மற்றும் அரசுக்குச் சொந்தமான பல்வேறு வகைப்பாடு

[2020 மார்ச் 16

உடைய இடங்களிலும், நீர்நிலைப் புறம்போக்காக இருந்து தரிசாக மாற்றப்பட்ட இடங்களிலும் கட்டப்பட்டு இப்பொழுது இயங்கி வருகின்றன. அதுபோன்று, அரசு நிலங்களைக் கையகப்படுத்தி, கொள்முதல் நிலையங்களைக் கட்டித் தருவதன்மூலம், விவசாயிகள், அவர்களே நிலத்தை வாங்கிக் கொடுக்க வேண்டும் அல்லது தங்களது பட்டா நிலங்களை இதற்காகத் தர வேண்டும் என்கிற சூழ்நிலை மாறும். ஆகையினால், புறம்போக்கு நிலங்கள் அல்லது தரிசு நிலங்களை அரசாங்கம் TNCSC மூலமாகப் பெற்று, நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்களைக் கட்டித்தர ஆவன செய்யுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கு புறம்போக்கு நிலங்கள்தான் தெரிவு செய்யப்படுகின்றன. புறம்போக்கு நிலங்களில், வகைப்படுத்தப்பட்ட புறம்போக்கு நிலத்தில் எங்கெல்லாம் கொள்முதல் நிலையக் கட்டடத்தைக் கட்ட முடியுமோ, அந்த இடங்களில் கட்டடங்களைக் கட்ட முடிகிறது. அதாவது, நீர்நிலைப் புறம்போக்கு மற்றும் பயன்படுத்த முடியாத இதர புறம்போக்கு நிலங்களைத் தவிர, பயன்படுத்தக்கூடிய புறம்போக்கு நிலங்கள் எந்த இடத்தில் இருந்தாலும், அதற்குத்தான் முன்னுரிமை வழங்கப்படுகிறது. அவை கிடைக்காதபட்சத்தில்தான், விவசாயிகளிடமிருந்து தானமாகப் பெற்றோ அல்லது TNCSC–மூலம் வாங்குகிற நிலங்களிலோ, இன்றைக்குக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட 33 செண்ட் நிலம் இருந்தால் போதுமானது. 40 செண்ட் நிலம் கொடுத்தால் அல்லது புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டால், அங்கு களத்தோடு நெல் கொள்முதல் நிலையத்தைக் கட்டிக்கொடுப்பதற்கு ஆவன செய்யப்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.